Registered as a NewsPaper பக்கங்கள் 06 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்:- 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 14 ( 26 - 04 - 1992 ) ஞாயிற்றுக்கிழமை ஓசை: 68

## சடலத்தைத் தருமாறு ஆஸ்பத்திரியில் உறவினர்

உறவினர்களின் அனுமதியின்றி இறந்தவரின் சடலத்தை யாழ். போதனா வைத்திய சாலையினர் யாழ். பல்கலைக் கழகத்திற்கு அனுப்பிவைத்துள்ளனர். சடலத்தை உடனடியாக தம்மிடம் பெற்றுத் தருமாறு உறவினர்கள் காவல் துறையினரிடம் முறையீடு செய்துள்ளனர். மேற்படி சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது: ஓட்டுமடம் பொம்மை வெளியைச் சேர்ந்த ஏ.பெரியசாமி (வயது 73) என்பவர் சுகயீனம் காரணமாக யாழ். போதனா ( 6ஆம் பக்கம் பார்க்க )

# பௌத்த குழுவின் தீர்வு திட்டம்

# விடுதலைப் புலிகள் நிராகரிப்பு

## தமிழீழ மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யத் தவறிவிட்டது

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மக்களின் தேசிய இனப் பிரச்சினை சம்பந்தமாக பௌத்த நல்லெண்ணத் தூதுக் குழுவினர் சமர்ப்பித்த யோசனைகளை விடுதலைப் புலிகள் இயக்கம் நிராகரித்துள்ளது. நேற்று மாலை நடைபெற்ற இரண்டாம் கட்ட பேச்சுக்களின் போது விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் தமது நிலைப்பாட்டை பௌத்த குருமாருக்கு எடுத்து விளக்கினர். பௌத்த குழுவினரால் சமர்ப்பிக்கப்பட்ட தீர்வுத் திட்டம் ஏற்றுக் கொள்ள முடியாது என சுட்டிக்காட்டியதுடன் இந்த யோசனைகள் தமிழரின் அடிப்படையான அரசியல் அபிலாசைகளை நிறைவு செய்யத் தவறிவிட்டது எனவும் விடுதலைப் புலிகள் எடுத்து விளக்கினர்.

நேற்று மாலை 4 00 மணியில் இருந்து 5 30 மணிவரை இடம்பெற்ற பௌத்த குழுவினருடனான இரண்டாவது கட்ட சந்திப்பில் விடுதலைப் புலிகள் தரப்பில், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா, செயலதிபர் யோகரட்ணம் யோகி, புலிகள் இயக்கப் பிரமுகர் பாலகுமாரன், அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், யாழ். மாவட்டத் தளபதி செல்வராசா யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இளம்பருதி ''விடுதலைப் புலிகள்'' பத்திரிகை ஆசிரியர் ரவி, திருமதி அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இச் சந்திப்பில் பௌத்த நல்லெண்ண தூதுக்குழு முதல்கட்ட சந்திப்பின்போது வழங்கிய சமாதான தீர்வு (6ம் பக்கம் பார்க்க)

## மன்னார்-வவுனியா வீதியில் பெரும் படைக் குவிப்பு

வவுனியா மாவட்டம், மன்னார் - வவுனியா வீதியிலுள்ள நெலுக்குளம், செட்டிகுளம், பாவற்குளம் பகுதிகளில் பெருமளவு இராணுவம் குவிக்கப்பட்டு வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த சில நாட்களாக வவுனியா பகுதியிலிருந்து கவச வாகனங்கள், இராணுவ தளபாடங்கள் சகிதம் பெருமளவு இராணுவத்தினர் அப்பகுதிகளை நோக்கி நகர்த்தப்பட்டு வருகின்றதாகவும் தெரியவருகின்றது.

## தந்தை செல்வா நினைவாக மாபெரும் பொதுக் கூட்டம்

தமிழர் இன உணர்வை தட்டியெழுப்பிய தந்தை செல்வா அவர்களின் 15 ஆம் ஆண்டு நினைவு நாளான இன்று அவரின் நினைவுத் தூபிக்கு மலரஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சியும் நினைவுக் கூட்டமும் நடைபெறவுள்ளது.

காலை 8.30 மணிக்கு மலரஞ்சலி நிகழ்ச்சியும மாலை 5.00 மணிக்கு நல்லூர் ஆலய முன்றலில் நினைவுக் கூட்டமும் இடம்பெற உள்ளன.

(6 ஆம்பக்கம் பார்க்க)

## மணலாறில் புலிகள் அதிரடி 5 ராணுவம் பலி; 4 பேர் காயம்

மணலாறுமாவட்டம் கொக்கிளாய்க்கும், கொக்குத்தொடுவாய்க்குமிடையேயுள்ள இரண்டு சிறிலங்கா இராணுவ முகாம்கள் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், நான்கு பேர் காயமடைந்ததாகவும் சிறிலங்கா இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நேற்றுமுன்தினம் இவ்விரு முகாம்களையும் புலிகள சுற்றி வளைத்துத் தாக்கியதாகவும், கடற்படைப் பீரங்கிப் படகுகளின் பீரங்கித் தாக்குதலும், விமானப்படைத் தாக்குதலும் புலிகள் மீது மேற்கொள்ளப்பட்டதாகவும் மேலும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## குண்டுவெடிப்பு திட்டமிட்ட சதி; விசாரணைமூலம் வெளிவந்தது

கொம்படிப்பகுதியில் கடந்த வியாழனன்று நண்பகலில் ஏற்பட்ட குண்டுவெடிப்புச் சம்பவமானது சிறிலங்கா அரசு தேசத் துரோக சக்திகளின் உதவியுடன் மேற்கொண்ட திட்டமிட்ட செயலே என்று விடுதலைப் புலிகள் மேற்கொண்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது என நேற்று மாலை நடைபெற்ற செய்தி (6 ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு நீக்கம்

(கொழும்பு)

வவுனியா, மன்னார் மாவட்டங்களில் நேற்று காலை 6.00 மணிக்கு பிறப்பிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டம் நேற்று பிற்பகல் 6.00 மணிக்கு நீக்கப்பட்டதாக கூட்டுப்படை நடவடிக்கை தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது



நேற்று இடம்பெற்ற விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் - பௌத்த நல்லெண்ணத் தூதுக்குழு சந்திப்பின்போது எடுக்கப்பட்ட படம். இதில் தூதுக்குழுவின் ஒரு பகுதியினரையும், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு கோ.மகேந்திரராசா, செயலதிபர் திரு. யோகரட்ணம் யோகி, அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் ஆகியோரையும் காணலாம்.

# கட்சி மீது சேறு பூச தொடர்பு சாதனங்கள் பயன்பாடு

--சு. கட்சி கண்டனம்

அரசாங்கம் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மீது சேறு பூசுவதற்காக தனது கட்டுப்பாட்டிலுள்ள வெகுஜன தொடர்பு சாதனங்களை உபயோகிக்கும் முயற்சிகளை நாம் வன்மையாக கண்டிப்பதாக அக்கட்சி விடுத்துள்ள பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது;

இது தொடர்பாக சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தர்மசிறி சேனநாயக்காவினால் விடுக்கப்பட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

அம்பாறை, மஹரகம ஆகிய இடங்களில் இடம்பெற்ற குண்டு வெடிப்புக்கும் சுதந்திரக் கட்சிக்கும் தொடர்பு உண்டு என்ற ரீதியில் அரச கட்டுப்பாட்டிலுள்ள வெகுசன தொடர்பு சாதனங்கள் பிரசாரம் செய்து வருகின்றன.

இரு குண்டுத் தாக்குதல்களிலும் அப்பாவிகள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இக்குரூரமான கோழைத்தனமான கொலைகளை நாம் வன்மையாக கண்டிக்கிறோம் எனவும் அப் பத்திரிகை குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மருத்துவபீட அனுமதி

1990 ஆகஸ்ட் 1991 ஏப்ரல் பரீட்சைகளில் தோற்றி தகுதி பெற்றவர்களிலிருந்து எதிர்வரும் கல்வி ஆண்டிற்காக வைத்திய பீடத்திற்கு எண்ணூறு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப் படவுள்ளனர் எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. எதிர்வரும் கல்வி ஆண்டில் ஒன்பதினாயிரம் மாணவர்கள் பல்கலைக் கழகங்களில் சேர்க்கப்படவுள்ளனர்.


## வரி விளம்பரம்

### ஜயந்தி விழா

மகாசமாதி பெற்ற மௌன குரு கடவுள் சுவாமிகளின் 86 வது ஜயந்தி விழா நாளை திங்கட்கிழமை, உடுவில் கிழக்கு கடவுள் சுவாமிகள் சமரச சன்மார்க்க பிரேமானந்த நிலையத்தில் நடைபெறும். (2502)


# தனி நபர் வாய்ப்பேச்சால் பெருமளவு மக்கள் பலி

-காமினி

(கொழும்பு)

தமிழ் மக்களது பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வு காணவே இலங்கை-இந்திய அமைதி உடன்பாடு ஏற்பட்டது ஆனால் தனிநபர்களினது வாய்ப்பேச்சினால் நாடெங்கும் தமிழர்களும் சிங்களவர்களும் நூற்றுக்கணக்கில் பலியாகின்றார்கள். அரசைப் பொறுத்தவரை இது தந்திரம். ஆனால் பௌத்த தர்மத்தின் படி மனித நீதியின் படி இது கொடுமை

இவ்வாறு ஜனநாயக ஐக்கிய தேசிய தொழிலாளர் சங்கத்தின் பணிமனையில் நடைபெற்ற கருத்தரங்கை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய காமினி திசாநாயக்கா தெரிவித்தார்

அவர் தொடர்ந்து பேசுகையில்; பிரச்சினைக்கு தீர்வு யுத்தமல்ல என்று கூறி சர்வகட்சி மகாநாடு கூட்டப்பட்டு பேசப்பட்டவை அனைத்தும் வெறும் கண்துடைப்பே இன்று யுத்தமே தீர்வு என்ற நிலையுள்ளது

மேலும் தனிநபர்களது துதிபாடும் நிலைமை நாட்டின் அமைதிக்கும் ஆக்கத்திற்கும் சவாலாக இருக்கின்றது மனித சுதந்திரம் அடியோடு மறுக்கப்பட்டுள்ளது நீதியற்ற முறையில் அராஜகம் தலைவிரித்தாடும் நிலைமை தோன்றியுள்ளதை சகலரும் அறிவோம்.

மேலும் பிரிவு, வேதம் மோதல் என்ற கொடுமையான சிந்தனைகளில் இருந்து விடுபட்டு இனவாதத்திற்கு எதிரான ஒரு பூரணத்துவ அமைதி அணி உருவாவதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

# வங்கி பற்றிய கருத்துக்கள் தவறாக வெளியிடுகின்றனர்

-நிதியமைச்சு

(கொழும்பு)

இலங்கை வங்கி, மக்கள் வங்கி என்பன பற்றி ஒரு குறிப்பிட்ட குழுவினால் வெளியிடப்படும் பத்திரிகையில் வரும் செய்திகள் தவறான கருத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருப்பதாக நிதி அமைச்சு கூறியுள்ளது. வங்கியின் செயற்பாட்டை மறுசீரமைப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் பற்றி தவறான விளக்கங்கள் அளிக்கப்படுவதால் மக்கள் தவறான வழியில் இட்டுச்செல்லப்படுவதுடன் அரசுக்கு அபகீர்த்தி ஏற்படும் வகையிலும் வேண்டுமென்றே செயற்படுவதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இரு வங்கிகளினதும் பூரண உரிமையை அரசு தொடர்ந்தும் கொண்டிருக்கும் என்று அரசாங்கம் உறுதி அளித்துள்ளது.

# இலங்கைதிரும்பும்அகதிகள் சொந்த இடம் செல்லத்தடை

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து இலங்கை திரும்பும் அகதிகள் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ளபிரதேசங்களில் சென்று குடிபேறுவதை தவிர்க்கும்படி கூட்டுப்படைத் தலைமையலுவலகம் கேட்டுக் கொண்டுள்ளது. இவ்வாறு இந்தியாவிலிருந்து திரும்புவோர் இப்பகுதிகளில் குடியேறுவதற்கு ஆர்வம்காட்டக் கூடாது எனவும், இந்த இடங்களை மீட்க இராணுவம் நடவடிக்கை எடுக்கும் போது பாதிக்கப் படுவதைத் தவிர்க்கும் முகமாகவே இவ்விதம் அறிவுரை விடுக்கப் படுவதாக அமைச்சரவைப் பேச்சாளரான ரணில் விக்கிரசிங்க கடந்த வியாழன் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பேசும்போது தெரிவித்தார்.

# பொதுத் தேர்தல் அறிக்கை ஆராய தெரிவுக்குழு

தேர்தல் ஆணையாளர் வெளியிட்டுள்ள பொதுத்தேர்தல் அறிக்கை குறித்து ஆராய வழமைபோல பாராளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்படும் என சிறிலங்காபிரதமர் டி.பி. விஜயதுங்கா தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க் கிழமை பாராளுமன்றத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி எம்.பி.நிமால் சிறிபால டீ சில்வா எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கும் போது இவ்வாறு தெரிவித்தார்.

## சார்க் நாடுகளிலிருந்து பழ இறக்குமதி

(கொழும்பு)

பழ வகைகள் இனிமேல் சார்க் நாடுகளிலிருந்து கூட்டுறவு மொத்த நிறுவனத்தினால் இறக்குமதி செய்யப்பட்டு விநியோகிக்கப்படவுள்ளது. தோடம்பழம், திராட்சைப்பழம், அப்பிள்பழம் போன்றவற்றைக் குறைந்த விலையில் மக்களுக்குக்கிடைக்கச்செய்யவும், பிராந்திய வர்த்தகத்தை ஊக்குவிக்கவும் இது உதவுமென்று சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்த யோசனைக்கு இணங்கக் கூட்டுறவு மொத்த நிறுவனம் இறக்குமதிசெய்து கூட்டுறவுக் கடைகள் மூலம் விநியோகிக்கவுள்ளது,

# உடுகம்பொல நடவடிக்கை சுதந்திரக்கட்சி கண்டிக்கிறது

- அனுரா

(கொழும்பு)

முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் உடுகம்பொலவின் நடவடிக்கைகளை தானும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் கண்டனம் செய்வதாக பதில் எதிர்க்கட்சித்தலைவர் அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

கடந்த வியாழன் பாராளுமன்றத்தில் அவசரகாலச்சட்ட நீடிப்பு தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டுபேசிய அவர் மேலும் கூறுகையில், இந்தச் சபையிலும், பொது அரசியல்மேடைகளிலும் எடுத்துக் கூறியிருப்பதாகவும் தெரிவித்தார்.

## பாதயாத்திரை

# அமைப்பாளர் கொலைபற்றி முப்பது பேரிடம் விசாரணை

(மாத்தளை)

எம்பிலிப்பிட்டிய கமகந்தையைச் சேர்ந்த பாதயாத்திரை அமைப்பாளர் ரூப்பசேன வீரதுங்க இனம் தெரியாத துப்பாக்கி நபர்களால் கொலைப்பட்டது குறித்து எம்பிலிப்பிட்டிய பொலிசார் மாகாணசபை பிரதேச சபை உறுப்பினர்கள் உட்பட முப்பது பேரிடம் விசாரணை நடாத்தியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது

எனினும் இவர்களைச் சம்பந்தப்படுத்தும் எந்த ஒரு சாட்சியமும் இதுவரை கிடைக்கவில்லையெனப் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

இது இவ்வாறிருக்க பாதயாத்திரை வெற்றிகரமாக முடிய ஒத்துழைத்த கட்சிகளின் உறுப்பினர்கள். பிரதேச பத்திரிகை நிருபர்கள் என்போர் சில அரசியல்வாதிகளால் பயமுறுத்தப்படுவதாக யாத்திரை ஏற்பாட்டாளரும் அம்பாந்தோட்டை சு. கட்சி எம். பியுமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.


LONDON ACCOUNTANCY CLASSES

NOV - DEC - 1992

| | | | |
|---|---|---|---|
| C. I. M. A. | Stage I | 2nd | May 1992 |
| | Stage II | 30th | May 1992 |
| A. A. T. (LONDON) | Prelim | 2nd | May 1992 |
| | Inter | 30th | May 1992 |
| A. A. T. (SRI LANKA) | Level I | 2nd | May 1992 |
| | Lepel II | 30th | May 1992 |
| I. A. B. | Foundation | 2nd | May 1992 |
| | Inter | 2nd | May 1992 |
| | Final | 6th | May 1992 |

மேலதிக விபரங்களுக்கு

NORTH CEYLON TECHNICAL INSTITUTE

(Result Oriented Institute in North)

14st Peters lane, Hospital Road, Jatfna

(சி/4333)



## நினைவுகூருகின்றோம்...

1992-04-26

1986 ஆம் ஆண்டு இதேதினத்தில் திருக்கோணமலை, கும்புறுப்பிட்டிப் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய-

**அலெக்ஸ்** (கந்தையா ஜெயக்குமார் -அலஸ்தோட்டம், சாம்பல்தீவு, திருக்கோணமலை)

**ரகீம்** (த. குணரட்ணம் - சாம்பல்தீவு, திருக்கோணமலை)

1987 ஆம் ஆண்டு திருக்கோணமலை, குச்சவெளிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய-

**2ஆம் லெப். சபேசன்** (அன்ரன் டெராஜ் லீனஸ் -6ஆம் வட்டாரம், சாம்பல்தீவு, மூதூர், திருக்கோணமலை)

திருக்கோணமலை, மூதூர், பட்டித்திடல் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட தமிழர்கள்.

1989 ஆம் ஆண்டில் மட்டக்களப்பில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப் பொது மகன்.

1991 ஆம் ஆண்டு ஊர்காவற்றுறையில் சிறிலங்காப் படையினருடனான நேரடி மோதலின் போது விழுப்புண் அடைந்திருந்து வீரச்சாவெய்திய-

**குட்டி** (மாணிக்கம் ரவீந்திரன் - புத்தூர் மேற்கு)

குப்பிளானில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய-

**லெப். தியாகு** (ஆழ்வாப்பிள்ளை தர்மராசா - குச்சவெளி, திருக்கோணமலை)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(சி/4330)

# ஆப்கானிஸ்தானில் ஆட்சி பொறுப்பு 51 பேர் கொண்ட இடைக்கால சபை?

[இஸ்லாமாபாத்]

ஆப்கானிஸ்தானின் போராளித் தலைவர்கள் அதிகாரத்தைப் பொறுப்பேற்றுக்கொள்வதற்கு 51 அங்கத்தவர்களைக் கொண்ட இடைக்கால சபையை அமைப்பதற்கு இணங்கியுள்ளார்கள்.

இந்த இடைக்கால சபை ஆப்கான் நாட்டில் இராணுவம், ஏனைய நிலையங்களையும் மற்றும் காபூல் நிர்வாகத்தையும் பொறுப்பேற்கும்.

முக்கிய பத்துப் போராளிக் குழுக்கள் ஒவ்வொன்றும் தலா ஐந்து பிரதிநிதிகள்வரை தெரிவு செய்து ஆப்கான் இடைக்கால ஆட்சியை நடத்தும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இடைக்கால நிர்வாகத்துக்கு மிதவாதியான பஹறதின் தலைமை வகிப்பார். பாகிஸ்தான் பெஸவாரில் நிலை கொண்டிருக்கும் போராளித் தலைவர்கள் இடைக்கால சபையை அமைப்பதற்கு இணங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது ஆனால், ஈரானிலுள்ள சியா தரப்புப் போராளிகள் இதற்கு இணங்கினார்களா என்பது ஊர்ஜிதம் செய்யப்படவில்லை.

இதற்கிடையில் முஜாஹிதீன் போராளிகள் ஹைதராபாத் நகரத்தையும் கைப்பற்றிக் கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது காபூல் நகரம்மட்டுமே எஞ்சியிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆப்கானிஸ்தானில்

## தேசிய சமரசத்தை ஏற்படுத்த பாகிஸ்தான் உதவ வேண்டும்

### ஐ.நா செயலர்

[இஸ்லாமாபாத்]

ஆப்கானிஸ்தான்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பூட்டர்ஸ்காலி பாகிஸ்தானின் உதவியை நாடியிருக்கிறார்.

நேற்று முன்தினம் இஸ்லாமாபாத் பேய்ச்சேர்ந்த அவர் செய்தியாளர்களிடையே பேசுகையில் ஆப்கானிஸ்தானில் தேசிய சமரசத்தை ஏற்படுத்த ஐக்கிய நாடுகள் சபைக்கு பாகிஸ்தான் உதவிட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

## இடைக்கால சபை அமைக்க கேக் மத்தியார் ஆதரவு?

ஆப்கானிஸ்தான் கிளர்ச்சித் தலைவர்களில் ஒருவரான குல்புதின் கேக் மத்தியார் இடைக்கால சபை அமைப்பதற்கு நிபந்தனையுடன்கூடிய ஆதரவை அளித்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பிரதமர் ஒருவர் நியமிக்கப்படுவதற்கும் கேக் மத்தியாரின் தலைமையின் கீழான கேஸ்தே இஸ்லாமியக்கட்சி ஏற்றுக் கொண்டுள்ளது

ஆனால் உடனடியாக இடைக்கால அரசை அமைப்பதற்கு கேஸ்தே இஸ்லாமியக் கட்சி ஆதரவு தெரிவிக்கவில்லை தற்போது அமைக்கப்படும் இடைக்கால சபை இரண்டு மாதங்கள் மட்டும் பதவியில் இருக்கும் எனவும் பின்னர் ஜமாயித்தே இஸ்லாமிய அமைப்பின் குர்காபுதின் றபானி தலைமையிலான சபை நான்கு மதம் வரை ஆட்சியிலிருக்கும் எனவும் கேக் மத்தியார் கட்சி சார்பான ஒருவர் பிரதமராக இருப்பார் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனினும் முஜாகிதீன்களின் இதே நடவடிக்கைகளை தொடர்பாக தற்போதைய காபூல் அரசு கருத்து எதையும் வெளியிடவில்லை. முஜாகிதீன்களின் கிளர்ச்சிப் படைகள் இன்னும் இருதினங்களில் காபூலுக்குள் நுழைந்து விடக்கூடும் என்று காபூலில் இருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

## பாராட்டு

இந்தியாவின் பொருளாதார சீர்திருத்தங்கள் சரியான திசையில் மேற்கொள்ளப் பட்டு வருவதாக ஐ எம் எப். வின் தலைவர் கூறியுள்ளார்.

வாஷிங்டனில் செய்தியாளர்களிடம்பேசிய அவர் மேலும் கூறுகையில் இந்தியா சர்வதேச நாணய நிதியம் எதிர்பார்த்ததை விடவேகமாக செயற்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

## லொஸ்ஏஞ்சல்ஸில் பூகம்பம்

தென்கலிபோர்னியாவில்ஏற்பட்ட பலமான பூகம்பம் காரணமாக கட்டடங்கள் பல சேதமுற்றதுடன் பலர் காயமுற்றும் உள்ளனர்.

இதற்குமுன் புதன்கிழமை ஏற்பட்ட பூகம்பத்தின் போது பரந்த அளவில் சேதங்கள் ஏற்பட்டன. வீடுகள் பலவற்றின் கூரைகள், அடித்தளங்கள் வெடித்தன தொலைத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன தொலைக்காட்சி நிலையமொன்றும் செயல் இழந்தது.

பாதைகளில் ஓடிய கார்கள் ஒன்றோடொன்று மோதிக் கொண்டன.

# புதிய மனித ஒற்றர்களை தேடுகிறது அமெரிக்க மத்திய உளவு அமைப்பு

### -- நியூஸ் வீக் தகவல்

(வாஷிங்டன்)

அமெரிக்கா தனது உளவறியும் முறைகளை மாற்றியமைக்க இருப்பதாக தெரிய வருகிறது இது சம்பந்தமான 'சட்டங்களையும்' செலவைக் குறைக்கும் 'திட்டங்களையும்' புலனாய்வுத் துறையின் முப்பது பில்லியன் டாலர் மதிப்புள்ள இந்த ஆண்டின் வரவு - செலவுத் திட்டத்தை செனேட்டில் தாக்கல் செய்யும்போது புலனாய்வுத்துறையின் தலைவர் டேவிட் போறென் சமர்ப்பித்த போது அறிவித்தார்.

இது சம்பந்தமாக அண்மைய நியூஸ்வீக் சஞ்சிகை 'அமெரிக்கா புதுவகை ஒற்றர்களைத் தேடுகிறது' என்ற தலைப்பில் வெளியிட்ட கட்டுரையில் மேலும் பல தகவல்கள் கூறப்பட்டுள்ளது.

இருபத்தோராம் நூற்றாண்டில் அமெரிக்கப் புலனாய்வுத்துறையின் செயற்பாடுகள் போதைப் பொருள் கடத்தலை கண்டுபிடித்தல், அணு ஆயுத உற்பத்தி பரவலைத் தடுத்தல், பயங்கரவாதப் பிரச்சினைகள், பொருளாதாரப் பிரச்சினைகளில் உளவு பார்த்தல் போன்ற பணிகளில் ஈடுபடும் என்று வெளிப்படையாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக பல்வேறு மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர்கள், அறிவியல் நிபுணர்கள் ஆகியோரைச் சேவையில் ஈடுபடுத்த அமெரிக்க புலனாய்வு நிறுவனம் தீர்மானித்துள்ளது.

கெடுபிடிப் போர் நிலவிய காலத்தில் ஒற்றர் வேலைகளுக்கு மனிதர்களில் அதிகம் தங்கியிருக்காது செய்மதி மற்றும் மின்னியல் ஒட்டுக் கேட்கும் சாதனங்கள் மூலம் பெரும்பாலான விபரங்கள் சேகரிக்கப்பட்டு வந்தன. ஆனால் இன்றைய தேவை அந்தந்த நாடுகளில் தங்கியிருந்து உளவு அறிய வேண்டியதாக இருக்கின்றது

தகுந்த இடங்களில் ஒற்றர்களை நிலை நிறுத்துவதனூடாக பொருளாதார விடயங்களைப் புலனாய்வு செய்யவும் அரசாங்கங்களுடன் வர்த்தகப் பேச்சுக்களில் ஈடுபடவும், செய்யப்படும் இது வாஷிங்டன் தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கு உதவுவதுடன் வெளிநாட்டு ஒற்றர்களால் அமெரிக்க வர்த்தகர்களுக்கு பாதிப்பு ஏற்படாமல் தடுக்கவும் முயற்சி எடுக்கப்படவுள்ளது எனத் தெரிய வருகின்றது.

புதிய உளவுத் தேவையை முழுமைப்படுத்துவதற்காக பௌதிகவியலாளர்களையும், வர்த்தகக் குறியீடுகளைப் புரிந்து கொள்ளக் கூடியவர்களையும் சேவையில் ஈடுபடுத்த மத்திய புலனாய்வு அமைப்பு முடிவு செய்துள்ளது. இவ்வாறு தெரிவு செய்யபட்டுபவர்களுக்கு வேர்சினியாவின் பியரி முகாமில் தொழிற் பயிற்சியும், மொழிப் பயிற்சியும் வழங்கப்படவுள்ளது.

உளவு பார்க்கும் செய்மதி ஒன்றை உலகை வலம் வரச் செய்வதிலும் பார்க்க குறைந்தளவு செலவினங்களே மனித ஒற்றர்களை வேலைக்கு அமர்த்துவதால் ஏற்படுகின்றது. வெளிநாட்டுத் தூதுவராலயங்களில் கடமையாற்றுபவர்களாக மாறுவேடத்தில் ஒற்றர்கள் பணிக்கு அமர்த்தப்படுகின்றனர் எனவும் நியூஸ் வீக் கூறியுள்ளது.

பனாமாவின்

## சர்வாதிகாரியான நொறீகா சி.ஐ.ஏயிடம் பணம் பெற்றார்

(வாஷிங்டன்)

பனாமாவின் சர்வாதிகாரியாக இருந்த மானுவேல் நொறீகா தன் நாட்டில் செல்வாக்கு மிகுந்தவராக இருந்த சமயத்தில் தன்னை உளவு வேலைக்கு அமர்த்தியவர்களிடமிருந்து ஆயிரத்து ஐந்நூறு டாலர்களை பெற்று வந்ததாக அமெரிக்க நியூஸ்வீக் சஞ்சிகை வெளியிட்ட கட்டுரை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஈராக் குவைத்தின் மீது படையெடுக்கும் முன்பாக சதாம் உசைனின் படைகளின் நடமாட்டத்தை செய்மதிகள் அறிவித்த போதும், இந்தப் படைகள் என்ன செய்யப் போகின்றன என்பதை அறிவிக்கக்கூடிய ஒற்றர்கள் இருக்கவில்லை என்பதையும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில்

# பத். சுதந்திரம் பேணப்படும் பழிவாங்கும் முயற்சியில்லை

### — ஜெயலலிதா

(சென்னை)

தமிழ்நாட்டில் பத்திரிகைச் சுதந்திரம் ஆரோக்கியமாக இருக்கிறதென்றும், பத்திரிகைகளைப் பழிவாங்கும் நடவடிக்கையில் தமது அரசும், சட்டப் பேரவையும் ஒருபோதும் ஈடுபடவில்லை என்றும் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தெரிவித்தார்.

தமிழ் நாட்டில் பத்திரிகைகள் கடுமையாகக் கட்டுப்படுத்தப்படுகின்றன என்று ஒரு கோஷத்தை அகில இந்திய அடிப்படையில் சிலர் உருவாக்கி வருவதாகச் சட்டப் பேரவையில் நேற்றுச் செல்வி ஜெயலலிதா குறிப்பிட்டார்.

தமிழ் நாட்டில் எது நடந்தாலும் தம்மீது பழி சுமத்துவதைப் பத்திரிகையாளர் கைவிட வேண்டுமென்று முதலமைச்சர் கேட்டுக் கொண்டார். பத்திரிகைகள் விமர்சிக்கட்டும். ஆனால், விமர்சனம் உண்மைகளைக் கொண்டதாக இருக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## தமிழக காங்கிரஸ் தேர்தல் தடுக்க டில்லியில் சதி

### -வாழப்பாடி குற்றச்சாட்டு

தமிழக காங்கிரஸ் கட்சிக்கு தேர்தல் நடத்தப்பட்டால் தாங்கள் ஒதுக்கப்பட்டு விடுவோம் என்ற பயத்தால் தேர்தல் நடத்துவதையே தடுக்கப் புதுடில்லியில் சிலர் சகுனி வேலை செய்து வருவதாக வாழப்பாடி ராமமூர்த்தி கூறியிருக்கிறார்.

மூப்பனார் தமிழக காங்கிரஸ் கட்சி தன் கையில் இருக்க வேண்டும் என்றும், அதன் தலைவராக வருகிறவர் தன் கைப்பாவையாக இருக்க வேண்டும் என்றும் விரும்புகிறார். இதனால் இவர்கள் எழுப்பும் சலசலப்புக்குத் தான் அஞ்சமாட்டேன் என்றும் தமிழ் நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி மூப்பனாரைக் குறைகூயிருக்கிறார்.

## சுவீடனும் இந்தியாவும் ஒத்துழைக்க உடன்பாடு

நலவாழ்வு, சுகாதாரம், அடிப்படைக்கல்வி, கிராமப் புறகுடிநீர் வசதி சமூகக்காடுகள் வளர்ப்பு மற்றும் சுற்றுச் சூழல் துறைகளில் வளர்ச்சி ஒத்துழைப்பு திட்டத்தை செயற்படுத்த இந்தியாவும், சுவீடனும் முடிவு செய்துள்ளன. புதுடில்லியில் நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட அரசு செய்திக் குறிப்பில் 415 கோடி ரூபா மதிப்பில் தயாரிக்கப்பட்ட திட்டம் ஒன்று இரண்டாண்டு காலத்திற்கு செயற்படுத்தப்பட இருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்திய நிதித்துறை அமைச்சின் கூடுதல் செயலர் வி. பி. வர்மாவும், சுவீடனின் துணை டைரக்டர் ஜெனரலும் இதற்கான உடன்படிக்கையில் கையொப்பமிட்டுள்ளனர்

## திருச்சிவிமானநிலையத்தில் இரு இல. தமிழர் கைது

(திருச்சி)

திருச்சி விமான நிலையத்தில் கடந்த வியாழனன்று இரண்டு இலங்கைத் தமிழர் கைது செய்யப்பட்டனர்.

கொழும்பிலிருந்து ஏயர் லங்கா விமானத்தில் பிரயாணம் செய்த இவர்களிடம் போலியான கடவுச் சீட்டுகளும் மற்றும் விசாக்களும் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸ் தரப்பில் சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

## தமிழக கல்லூரிகளில் இல. தமிழர் அனுமதி?

### -- பரிசீலிக்க கோரிக்கை

(சென்னை)

இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கு கல்வி நிறுவனங்களில் இடமளிப்பதில்லைஎன்ற முடிவைத் தமிழ் நாடு அரசு மாற்றி இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கு வரும் கல்வியாண்டில் கல்லூரிகளில் இடமளிக்க வேண்டும் என்று தமிழ் நாட்டில் பல்வேறு அமைப்புகள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவைக் கேட்டுக் கொண்டுள்ளன.

பங்களாதேஷ், பலஸ்தீன அகதிகளுக்கு கல்வி வசதிகளைச் செய்து கொண்டிருக்கும் அதேவேளையில் இலங்கைத் தமிழ் அகதி மாணவர்களுக்கு கல்வி கற்கும் உரிமையை மறுப்பது மனிதாபிமானமற்ற செயல் என்றும் அந்த அமைப்புகள் சுட்டிக் காட்டியுள்ளன.

## லெனின் சமாதிக்கு சிலர் மட்டும் விஜயம்

(மொஸ்கோ)

வீழ்ச்சியுற்ற சோவியத் நாட்டின் ஸ்தாபகரான விளாடிமீர் லெனினின் 122-வது பிறந்த தினத்தில் அவரது சிவப்பு நிற சலவைக்கல் சமாதிக்குச் சில ரஷ்யர்களே விஜயம் செய்தார்கள்.

புதிய சுதந்திர ரஷ்யா நேற்றைய முன்தினம் லெனின் பிறந்த தினத்தை முதல் தடவையாக உத்தியோக விடுமுறைப்பட்டியலிலிருந்து நீக்கியிருந்தது.

லெனினின் உடலைத் தரிசிக்கச் சென்றவர்கள் பாதுகாப்புக் காவலர்களால் கவனமாகச் சோதனையிடப்பட்டனர்.

செஞ்சதுக்கத்திலுள்ள சமாதிக்குச் சென்ற மக்கள் லெனினின் உருவப் படங்களை சோவியத் கொடிகளில் மரியாதையுடன் சுற்றி வைத்திருந்தார்.

'லெனின் வாழ்கிறார்' என ஒரு பதாகையில் எழுதப்பட்டிருந்தது. பெரும்பாலும் வயோதிபர்களைக் கொண்ட கூட்டம் லெனினின் பெயரையும் சோவியத் யூனியனின் பெயரையும் கோஷித்தது.

## சீக்கிய தலைவர்கள் விடுதலை

புதுடில்லிக்கு விஜயம் செய்த ஐ.நா பொது செயலாளர் பூட்டஸ் காலியைச் சந்தித்து மகஜரொன்றைக் கையளிக்க முனைந்தமைக்காக பொலிசாரால் கைது செய்யப்பட்ட சீக்கிய தலைவர்கள் நேற்று புதுடில்லியில் விடுதலை செய்யப்பட்டனர்.

## விசேட அபிஷேகம்

கொடிகாமம் அருள்மிகு சிவகாமசுந்தரி கோவிலில் நாளை திங்களன்று பி.ப2.00 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறவுள்ளன

நாட்டில் அமைதியையும் சுபீட்சத்தையும் ஏற்படுத்தி தமிழர்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் முகமாகவே இந்த அபிஷேக ஆராதனைகள் நடைபெற உள்ளன. (86)

## கருத்தரங்கு பிற்போடப்பட்டுள்ளது

தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான அபிவிருத்திக் கருத்தரங்கு மே மாதம் 2 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு யாழ். கல்வித் திணைக்கள மாவட்ட முகாமைத்துவ நிலையத்தில் நடைபெறும் என கல்விப் பணிப்பாளர் ஆர். சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்

## தந்தை செல்வா நினைவஞ்சலி

தந்தை செல்வாவின் நினைவஞ்சலி ஆராதனை தெல்லிப்பழைபிரதானவீதியில் அமைந்துள்ள தென்னிந்தியத் திருச்சபையில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவிருக்கிறது. இந்த நினைவஞ்சலி நிகழ்ச்சியில் வண. பிதா டி. ஆர் அம்பலவாணர் அவர்கள் நினைவுரை நிகழ்த்துவார்.

## பொதுக்கூட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத் தொண்டர் ஆசிரியர் சங்கப் பொதுக்கூட்டம் இன்று காலை 9 மணிக்கு கிளிநொச்சி கனிஷ்ட மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் சகல தொண்டர் ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு அச்சங்கத்தின் செய்திக்குறிப்பு ஒன்று கேட்டுக்கொள்கிறது.

---

## அக்குபங்சர் சிகிச்சை

அக்குபங்சர் சிகிச்சையில் நிபுணத்துவம் பெற்ற டாக்டரினால் ஆஸ்த்மா, நாரிபிடிப்பு, மூட்டுவாதம், பாலியல் பிரச்சினைகள் மற்றும் நரம்பு தொடர்பான தீராத நாட்பட்ட நோய்களுக்கும் வெற்றிகரமாக சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

**மல்றி மெடிக்கல் கிளினிக்**
95, யாழ். வீதி,
மானிப்பாய்

**மெடிசீனா ஆல்ற்றனேற்றிவா**
121/1,1/1 மானிப்பாய்வீதி,
யாழ்ப்பாணம்

செல்வி கவிதா
அருலடிலேன்,
கொக்குவில் கிழக்கு
கொக்குவில்
(சி/4329)

---

## புதிய உயர் கல்லூரி
## New College of High Studies

**AL 92**

Paper Classes
(செவ் -- வியா)

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | லோகசிங்கம் (11 மணி) |
| இ. நாகரிகம் | — | அருள்நங்கை (10 மணி) |
| வர்த்தகம் | — | பசில் (9 மணி) |
| தமிழ் | — | ரவி (8 மணி) |
| அளவையியல் | — | மகேந்திரன் (12 மணி) |
| கணக்கியல் | — | ராஜன் (1 மணி) |
| அரசியல | — | கியூபேட் (2 மணி) |

(சி-4277)

---

## பதவி வெற்றிடங்கள்

1. **Work Supervisors & Trainees** (வேலை மேற்பார்வையாளரும் பயிலுனரும்)
2. **Technical Officers & Trainees** (தொழில்நுட்ப அலுவலரும் பயிலுனரும்)
3. **Quantity Surveyors & Trainees** (கணிய அளவையியலாளரும் பயிலுனரும்)
4. **Management Trainee** (முகாமைத்துவப் பயிலுனர்)
5. **Cost Accounting Assistant** (கிரயவியல் உதவியாளர்)

மேற்படி பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சை 27-04-92 திங்கட்கிழமை தொடக்கம் 30-04-92 வியாழக்கிழமை வரை தினமும் பி.ப 2-00 மணி தொடக்கம் 6.00 மணிவரை கீழ் கண்ட விலாசத்தில் நடைபெறும். தகுதியானவர்கள் தங்கள் சுயவிபரத் திரட்டுடன் நேரில் சமூகமளிக்கவும்.

30, செட்டித் தெரு,
நல்லூர்

305)

---

## பட்டப்படிப்புகள் கல்லூரி

### புதிய மாணவர்களை அனுமதித்தல் 92/93

யாழ்/பேராதனைப் பல்கலைக்கழகங்களின் பின்வரும் வெளிவாரி பட்டப்படிப்புக்கான விரிவுரைகள் 1-5-92 இல் ஆரம்பமாகின்றன.

கலை முதற் தேர்வு [ G. A. Q ]
வர்த்தக முதற் தேர்வு [ First In Commerce ]
கலைமாணி [ B.A ]
வங்கியாளர் பரீட்சை [இடைநிலை]

விபரங்களுக்கு:
உதவிப்பதிவாளர்
**பட்டப்படிப்புகள் கல்லூரி**
148/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு:- பட்டப்படிப்புகளுக்கெனத் தனித்துவமாக இயங்கும்ஒரேயொருநிறுவனம் யாழ் நகரில்இதுமட்டுமே.
(சி/.325)

---

## விவசாய டிப்ளோமா

(ஒரு வருட கால இலவசப் பயிற்சி நெறி)

போதிக்கப்படும் பாடங்கள் :
மிருக பரிபாலனம், பயிர்வேளாண்மை, பூங்கனியியல், விவசாய மூலதத்துவம், பண்ணை முகாமைத்துவம், கமப்பொறியியல் (ஆண்கள்), மனைப்பொருளியல் (பெண்கள்), ஆங்கிலம்

தகைமைகள் : க. பொ. த. (சாதாரணதரம்) அல்லது தே.க.பொ.த. பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன் 30-05-92 இல் வயது 16-25 இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

★ உதவு தொகை வழங்கப்படும்.

விருப்பமுள்ள இருபாலாரும் 25 - 05 - 1992 இற்கு முன்னதாக
அதிபர்
**யாழ்ப்பாணக்கல்லூரி விவசாய நிறுவனம்**
மருதனார்மடம், சுன்னாகம்
என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

(2494)

---

## ஸ்ரீதர் திரையரங்கில்

தினசரி மாலை 4.00 மணிக்கும்
சனி, ஞாயிறு தினங்களில்
மாலை 4-00, 6-00 மணி
காட்சிகளாக காண்பிக்கப்படுகின்றது.


# Freedom Forces

(இந்தோனேசிய விடுதலைப் படை)

(சி/4314)

---

41-ம் நாள் **நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்**



வீரப்பிறப்பு
04.12.1974

வீரச்சாவு
17.03.1992

## லெப்டினன்ட் ஈழவன்
### (அரியரத்தினம் பிரதீப்குமார்)
குரும்பசிட்டி

குரும்பசிட்டி பெற்றெடுத்த வீரப்புதல்வா
ஈழவன் என்னும் பெயருடைய ஈழப்புதல்வா
சாதனைகள் பல செய்த செல்வப்புதல்வா
மணலாறு அணைத்துக்கொண்ட மாவீரப் புதல்வா.

26-04-92 இன்று நடைபெறும் 41-ம் நாள் நினைவஞ்சலியிலும் அந்தியேட்டிக் கிரியையிலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், சகபோராளிகள் நண்பர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

இங்ஙனம்
தாய், சகோதரிகள்,
மைத்துனர், மருமக்கள்.

ஞானவைரவ கோயிலடி,
கோப்பாய் வீதி.
உரும்பராய்.

(2496)

---

## பாரதி
## சித்தன்கேணி

# O/L
# DAY CLASS

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | - | J. R. சூரி |
| கணிதம் | - | நவரட்ணராசன் |
| தமிழ் | - | கடம்பேசுவரன் |
| சமூகக்கல்வி | - | திருக்குமார் |
| ஆங்கிலம் | - | R. D. பகீரதன் |
| வர்த்தகம் | - | சுதாகரன் |

ஆரம்பம் -- 28. 04. 1992
செவ்வாய் - 8.00 மணி

(சி - 4332)

## சிந்தனைக்கு

நம்பிக்கை விசுவாசத்தின் நடுவே நம்பிக்கைத் துரோகமும் நடமாடுவதைக் கண்டுணர்ந்தேன்.
- முதலாம் எலிசபெத் அரசி


# ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 26-04-1992
தொலைபேசி
ஆசிரியபீ — 025-3339 நிர்வாக — 3308
த. பெ. எண்


## துரோகத்தின் கொடூர முகம்?

கொம்படிப் பாதையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற குண்டுவெடிப்பில் 12 அப்பாவித் தமிழ்ப்பொது மக்கள் கொல்லப்பட்டார்கள். இருபதிற்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்தார்கள். இது சிறிலங்கா அரசாங்கமும் தமிழ்க் குழுக்களும் மேற்கொண்ட சதி நடவடிக்கையாகும்.

சிறிலங்கா இராணுவம் தமிழர் மீது தாக்குதல்கள் நடத்துவதும், படுகொலை செய்வதும் அரசாங்கத்தின் திட்டமிட்ட இனப்படுகொலையின் ஒரு பகுதி. சிங்களக் காடையர்கள் தமிழ் அப்பாவிகளைக் கொல்வது அவர்களது இனவெறி. இவற்றை நாம் ஏற்கிறோமோ இல்லையோ இனவாதம் இவ்வாறு தான் செயற்படும். ஆனால், தமிழ்க்குழுக்கள் அப்பாவித் தமிழர்களைக் கொல்வது துரோகத்தனம். இது அப்பட்டமான காட்டிக் கொடுப்புமாகும்.

தமிழீழப் போராட்டத்தில் துரோகிகளின் வரலாறு இன்று நேற்றல்ல, போராட்டம் ஆரம்பமான காலத்தில் இருந்தே உள்ளது. இவர்கள் காலத்திற்குக்காலம் ஆள் மாறி ஆள்மாறி துரோகத்தனத்தில் ஈடுபட்டுவந்துள்ளார்கள். முதலில் சிறிலங்கா அரசாங்கத்துடன் இணைந்து துரோகத்தனத்தில் ஈடுபட்டார்கள். பின்னர், இந்திய அரசாங்கத்துடன் சேர்ந்து செயற் பட்டார்கள், தற்பொழுது மீண்டும் சிறிலங்காவுடன் இணைந்து செயற்படுகின்றார்கள்.

துரோகத்தனத்தில் ஈடுபடுபவர்களின் அரசியல் நடவடிக்கைகள் எந்தளவிற்கு தமிழ் தேசிய இனத்தைப் பாதிக்கும் என விளங்கிக் கொள்ள முடியாமல், அரசியல் நடைமுறைக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாகவிமர்சிப்பவர்களும் உண்டு. அரசியல்ரீதியான துரோகத்தனத்தில் அநேகமானவை உடன் வெளிவராமையினால் இவர்களின் நடவடிக்கைகள் இனத்திற்கு செய்யும் துரோகங்கள் தானா என கேள்வி எழுப்புபவர்களும் உண்டு.

ஆனால் இவர்கள் மறைமுகமாக தமிழ் தேசிய இனத்திற்கு இழைத்த துரோகத்தை விட இந்தியாவுடன் இணைந்து நேரடியாகவே பல்லாயிரக்கணக்கான அப்பாவிகள் படுகொலைசெய்யப்படகாரணமானார்கள். இன்று நேரடியாக சிறிலங்கா இராணுவத்துடன் இணைந்து இன அழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்கள். ஆக்கிரமிப்பிற்குத் துணைபோகிறார்கள். இந்நடவடிக்கைகள் இன்று ஏற்பட்ட ஓர் உடனடியான செயற்பாடல்ல. கடந்த காலத்திலிருந்து தொடராக மேற்கொண்டுவந்த துரோகத்தனத்தின் வெளிப்பாடு. ஆனால், மக்களை நேரடியாகப் பாதித்த துரோகத்தனத்தின் செயற்பாடு.

இவ்வாறான இனத்துரோக நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், அதனால் கிடைக்கும் சுக போகங்களில் திளைக்கவும் இன்று தமிழ்க்குழுக்கள் என்ற போர்வையில் ஏராளமானோர் சிறிலங்கா அரசாங்கத்தினரிடமும் இராணுவத்தினரிடமும் மண்டியிட்டுக் கிடக்கின்றனர். ஆனால் இவர்களின் காட்டிக் கொடுப்புகளுக்கும்துரோக நடவடிக்கைகளுக்கும் புலிகள் தடையாக உள்ளனர். விடுதலைப் புலிகளால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பயணக் கட்டுப்பாடும் -'பாஸ்' முறை- துரோகத்தனம் புரிவோரின் செயற்பாடுகளை பெருமளவில் கட்டுப்படுத்தியுள்ளது. பயண ஒழுங்கில் விடுதலைப் புலிகள் மேற்கொள்ளும் கட்டுப்பாடுகளை கடுமையாக விமர்சிப்பவர்கள் இக் கொம்படிக் குண்டுவெடிப்பின் பின் இக் கட்டுப்பாட்டின். முக்கியத்துவத்தை புரிந்து கொள்ளலாம். துரோக சக்திகள் புலிகளுக்கு மட்டுமல்ல தமிழ் மக்கள் முழுவதுக்குமே எதிரானவர்கள் என்பதை காட்டுகிறது.

இதேவேளை மேலும் ஒன்று முக்கியமானதாகும். தமிழ்மக்களின் அழிவிற்குகாரணமாகவுள்ள இத்துரோக சக்திகளுக்கு அடைக்கலம் அளிப்பதற்கு இந்த மண்ணில் இன்னும் சிலர் உள்ளனர். இவ் அடைக்கலம் அளிப்பவர்கள் இல்லாது விட்டால் துரோக சக்திகள் இங்கு நுழைய முடியாது. ஆனால் உறவினர்கள், நண்பர்கள் என நினைத்து அடைக்கலம் அளிப்பவர்கள் ஒன்றை மறந்து விடக் கூடாது அவர்களின் சதியில் நீங்களும் உங்களை அறியாமல் சிக்கி விடுவீர்கள் அவர்கள் தமிழ் மக்களுக்கு விளைவிக்கும் துரோகத்தனத்திற்கு நீங்களும் ஆளாவீர்கள். ஏனெனில், துரோகத்தனம் புரிவோருக்கு எவ்வாறு தமது இனப்பற்று என்பது இல்லையோ அதுபோன்று உற்றார் உறவினர், நண்பர்கள் என்பதும் இல்லை.

# 1975-ல் சிறுவர்களாக நின்றவர்கள் இன்று ஆயுதம் ஏந்துகின்றனர்

### அரசு காலம் கடத்தியமையே இதற்குக் காரணம்

''நான் 1975 ஆம் ஆண்டு இங்கு வந்திருந்த போது ஓடி விளையாடித் திரிந்த சிறுவர்கள் எல்லாம் இன்று ஆயுதங்களைத் தாங்கி அரசுக்கெதிராக யுத்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். பிரச்சினைகளை தீர்க்காமல் அரசு காலத்தைக் கடத்திவந்ததே இந்த நிலைமைக்கு காரணம். தொடர்ந்தும் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருக்குமேயானால் இப்பொழுது சிறுவர்களாக ஓடிவிளையாடித் திரியும் மற்றுமொரு இளம் தலைமுறையும் ஆயுதம் தாங்கி அரசுக்கு எதிராக யுத்தம் செய்வதை தவிர்க்க முடியாத நிலை ஏற்படும்'' இவ்வாறு யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் பௌத்த பிக்குகளின் நல்லெண்ணத் தூதுக் குழுவின் பிரதம பிக்குவான அமரபுர நிக்காய வண. பலப்பிட்டிய சிறிசிட்டாதிய மகாநாயக்க தேரர் தெரிவித்தார்.

பௌத்த பிக்குகளின் நல்லெண்ணத் தூதுக்குழுவினர் நேற்று முன் தினம் யாழ். செயலகத்துக்குச் சென்றிருந்த போது செயலக கேட்போர் கூடத்தில் யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் பேசும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றும் போது தற்பொழுது நடந்துகொண்டிருக்கும் யுத்தம் தொடர்ந்தும் நடைபெறுமேயானால் எமது நாட்டில் அபிவிருத்திக்குப் பதிலாக அழிவுகளே எஞ்சும் என்றும் எனவே தாம் கொழும்பு திரும்பியவுடன் தற்போதைய தேவையற்ற அழிவுகளை ஏற்படுத்தும் அனாவசிய யுத்தத்தை நிறுத்தும்படி அரசாங்கத்திடம் கோரிக்கை விடுப்போம் என்றார். (க)

# முள்ளிக் குளம் கிராமப் பகுதியில் பட்டினிச்சாவை எதிர்நோக்கிமக்கள்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் இருக்கும் முள்ளிக்குளம் கிராமத்தில் வாழும் மக்கள் போதிய உணவுப் பொருள்களும், மருந்துவசதியும் இல்லாமல் பெரும் சிரமங்களை எதிர் நோக்கியிருப்பதாகத் தெரியவருகிறது

சாதாரண பனடோல் மருந்துகளை வாங்குவதற்கு கூட சுமார் முப்பதுமைல் தூரத்தை கால் நடையாகக் கடந்துவர வேண்டிய அவல நிலையில் இவர்கள் வாழ்வதாகவும் தெரியவருகின்றது

பட்டினிச் சாவை எதிர் நோக்கியவர்களாக வாழும் இக் கிராமத்தைச் சேர்ந்த சுமார் இருபத்தி மூன்று குடும்பங்களை அரச சார்பு நிறுவனங்களோ அரச சார்பற்ற நிறுவனங்களோ இது வரை திரும்பியும் பார்க்கவில்லையாம்

இதனிடையே முள்ளிக்கிராமம் பல தடவைகள் இராணுவ முற்றுகைக்கு உள்ளாக்கப் பட்டதுடன் வீடுகள் இராணுவத்தினரால் எரிக்கப் பட்டும், அழிக்கப்பட்டும், பொருள்கள் சூறையாடப்பட்டும் இருப்பதாகவும் அறிய வருகின்றது.

இந்த மக்களுக்கு உதவுவதற்குமுன் வருமாறு பலபொது ஸ்தாபனங்களுக்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

### வாழைச்சேனையில்

# தமிழ் மக்களின் வீடுகளில் சிங்களவர் குடியேற்றம்

(மண்டூர்)

வாழைச்சேனைப் பகுதியில் இருந்து அகதிகளாக வெளியேறிய தமிழ்க்குடும்பங்களின் வீடுகளில் வெளியார் குடியமர்த்தப்பட்டு வருகின்றனர் என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து இது தொடர்பாக ஆவன செய்யப் படும் என்று மட்டக்களப்பு மாவட்ட பாதுகாப்பு இணைப் பதிகாரியான பிரிகேடியர் என். கே. பி. அங்கமன தெரிவித்தார்.

அகதிகளின் அடிப்படைத் தேவைகள் குறித்து ஆராயுமுகமாக மட்டக்களப்புக்கு விஜயம் செய்த அவர் எதிர்க்கட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்ட கூட்டத்தில் வைத்தே இதனைத் தெரிவித்தார்.

## வவுனியா டிப்போவும் மக்கள் மயம்?

(கொழும்பு)

வடபகுதியிலுள்ள பஸ் டிப்போக்களில் வவுனியா பஸ் டிப்போ இம்மாதம் 28-ம் திகதி முதல் மக்கள் மயப்படுத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த டிப்போவின் நிர்வாகம் அதன் ஊழியர்களிடம் கையளிக்கும் வைபவம் போக்குவரத்து ராஜாங்க அமைச்சர் எம். பாருக் அவர்கள் தலைமையில் வரும் 28-ம் திகதி நடைபெற உள்ளது.

மக்கள் மயப்படுத்தப்பட்ட பஸ்டிப்போக்களில் இது 84-வது என்பது குறிப்பிடத்தக்கது.

### புலிகளுக்கு எதிரான

# இந்திய அரசின் நடவடிக்கை உறவை பாதிக்கக்கூடாது

### - தொண்டமான்

(கொழும்பு)

புலிகளுக்கு எதிராக இந்தியாவில் எடுக்கப்படும் நடவடிக்கை இலங்கை - இந்திய மக்களுக்கிடையிலுள்ள பாரம்பரிய நல்லுறவு பாதிக்கப்படாத வகையில் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று அமைச்சர் எஸ். தொண்டமான் கூறியிருக்கிறார்.

எந்தச் செயலுக்கும் எதிர் விளைவு உண்டு. பதவியில் உள்ள அரசுகள் இதை நினைவிலிருத்திக் கொள்ள வேண்டும் என்று தொண்டமான் சுட்டிக் காட்டியுள்ளார். இதனால் புலிகளைத் தடை செய்வதை தான் விரும்பவில்லை என்பதை அவர் மறைமுகமாகத் தெரிவித்திருப்பதாக செய்தி விமர்சகர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

புலிகளுக்கு இந்தியாவும்,

தமிழ்நாடும்தான் அளவுக்கு மீறி ஆதரவு கொடுத்து வந்தது என்று சிறிலங்கா அரசு குற்றம் சாட்டி வந்தது. புலிகள் இயக்கத்தை இந்தியா தடை செய்வதன் மூலம் அந்தக் குற்றச்சாட்டு உண்மைதான் என்பது நிரூபிக்கப்பட்டு விடும் என்றும் தொண்டமான் வலியுறுத்தியிருக்கிறார்.

### கூட்டுப்படை தலைமையக

# குண்டுவெடிப்பு சந்தேகநபர் நீதிமன்றத்தில் ஆஜர்


ஜே.ஓ.சி குண்டு வெடிப்பு சந்தேக நபரான சங்கரப்பிள்ளை பாலச்சந்திரன் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி எல். என். டி ஜெயசூரிய முன்னிலையில் புதனன்று ஆஜர் செய்யப் பட்டார்.

எதிரி சார்பில் சட்டத்தரணிகள் திருமதி கௌரிசங்கரி தவராஜா, ஜிலிரி, எஸ்களுபஹன ஆகியோருடன் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.எல்.எம். அமீன் தமது கட்சிக்காரர் மீது தகவல் கொடுக்கத் தவறிய 5 ஆம் பிரிவுக் குற்றச்சாட்டுக்கள் இரண்டு சுமத்தப்பட்டிருப்பதாகவும் வழக்கை விரைவில் முடிக்கவேண்டி எதிரியின் கைரேகை அறிக்கையை கோருமாறும் தற்போதுள்ள தடுப்பு காவல் உத்தரவை விலக்கிக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் நீதிபதியைக் கேட்டுக் கொண்டார்.

# புதியதொலைக்காட்சிசேவை மேஇல் ஆரம்பம்

(கொழும்பு)

எம்.ரி.வி. எனப்படும் மகாராஜா தொலைக்காட்சி சேவை எதிர்வரும் மே மாதம் எட்டாம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. இது இலங்கையில் நடைபெறும் மூன்றாவது ஒளிபரப்பு ஆகும். அரச தொலைக்காட்சியான ரூபவாகினியுடன், ஐ ரி. என் தொலைக்காட்சி சேவை நடைபெறுவது தெரிந்ததே. மே மாதம் எட்டாம் திகதி முதல் ஆரம்பிக்க இருக்கும் எம். ரி. வி. தொலைக்காட்சி சேவை மாலை ஆறு முப்பது மணி முதல் நள்ளிரவு பன்னிரண்டு மணிவரையான ஆறு மணி நேரத்திற்கு கொழும்பிலிருந்து இருபது மைல் சுற்றாடலுக்குள் மட்டுப்படுத்தப்பட்டு நடைபெறும். ஜூலை மாதம் முதல் இது இலங்கை முழுவதுக்குமான சேவையாக விரிவுபடுத்தப்படவிருக்கின்றது இச்சேவை அலைவரிசை எண் இருபத்தைந்தில் நடைபெறும்.



விடுதலைப் புலிகளால், யுத்த கைதிகளாகப் பிடிக்கப்பட்ட 40 பொலிசாரையும், ஓர் இராணுவ சிப்பாயையும், யாழ். வந்த பௌத்த பிக்குகள் சந்தித்த போது பிடிக்கப்பட்ட படம்.

# ஆயுதங்களாலேயே வாழ்கிறோம் அவற்றை ஒப்படைக்க கோராதீர்

## பிக்குகளிடம் ஒரு தாய் கருத்து

(யாழ்ப்பாணம்)

"ஆயுதங்கள் தான் எமது உயிர்நாடி. ஆயுதங்கள் இருப்பதாலேயே நாம் அழிக்கப்படாமல் பாதுகாக்கப்படுகின்றோம். ஆயுதங்களைக் கீழே வைக்கும்படி கூறி எம்மை அழிக்க முயற்சிக்காதீர்கள். ஆயுதங்களைக் கீழே வைக்கும்படி கூறாமல் பிரச்சினைகளை தீர்க்க முயற்சி செய்யுங்கள்" இவ்வாறு யாழ்ப்பாணம் வந்திருக்கும் பௌத்த பிக்குகளின் நல்லெண்ணத் தூதுக்குழுவினரிடம் யாழ் பெரிய கடையில் மரக்கறி விற்கும் வயோதிபத் தாய் ஒருவர் ஆவேசத்துடன் வேண்டுகோள் விடுத்தார்.

பௌத்த பிக்குகளின் தூதுக் குழுவினர் நேற்று முற்பகல் யாழ்.பெரியகடைப்பகுதிக்குச் சென்றபோது அங்கு மரக்கறி விற்பனை செய்து கொண்டிருந்த மேற்படி தாய் பிக்கு குழுவினரை வரவேற்றதுடன் இப்பகுதிளில் வாழும் மக்கள் கடந்த காலத்தில் அரசபடைகள் மேற்கொண்ட தாக்குதல்கள் காரணமாக எதிர் கொண்ட கஷ்டங்களை எடுத்துக் கூறினார் பல்வேறு சமயங்களில் தமிழர்கள் கொல்லப்படுவது பற்றிக் கூறும் போது ஆவேசமடைந்த நிலையில் அபிநயம் செய்து நிலைமைகளை விளக்கினார். எங்களை அழிப்பதற்கு அரசு முயற்சிக்கிறது. இதை நிறுத்தி "எங்களை நிம்மதியாக எங்கள் சொந்த மண்ணில் வாழ விடுங்கள்" என்று உணர்ச்சி ததும்ப உரத்த குரலில் கூறினார். இறுதியில் மேற்படி வேண்டுகோளை விடுத்தார். இத்தாயின் வேண்டுதல்களை பிரதம பௌத்த பிக்கு மிகவும் ஆர்வத்துடன் கணிசமான நேரம் நின்று செவி மடுத்தார். (க)

# யாழ். வைத்தியசாலையை பிக்குகள் பார்வையிட்டனர்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையைபௌத்த நல்லெண்ணதூதுக் குழுவினர் பார்வையிட்டனர்.

நேற்று முற்பகல் இவ்வைத்தியசாலைக்குச் சென்ற தூதுக்குழுவினர் வைத்தியசாலையின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று பார்வையிட்டதுடன் நோயாளர் சிலருடனும் உரையாடினர். வைத்தியசாலையில் எதிர் நோக்கப்படும் பிரச்சினைகள் பற்றியும் அறிந்து கொண்டனர் (க)

# நல்லூர் ஆலயத்திற்கு பௌத்த பிக்குகள் வருகை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் பௌத்த பிக்குகள் நேற்று நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்குச் சென்று வழிபாடு செய்தனர்.

காலை 10 00 மணியளவில் மேற்படி ஆலயத்திற்குச் சென்ற பிக்கு குழுவினர் சிறிது நேரம் அங்கு தரித்து நின்று ஆலய தரிசனம் செய்தனர். பிக்குகள் ஆலயத்தில் தரிசனம் செய்து கொண்டு நிற்கும் போது நூற்றுக் கணக்கான மக்கள் கூடிநின்று பார்த்தனர். (க)

# யுத்த நிறுத்தம் செய்து புலிகளுடன் பேசுக

வடக்கு - கிழக்கில் தேவையற்ற யுத்தமொன்றின் மூலம் இராணுவ ரீதியாகத் தமிழ் மககளின் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாது என்பதைக் கடந்தகால வரலாறுகள் எமக்கு புகட்டி விட்டன. அதனால் உடனடியாக யுத்த நிறுத்தத்தைச் செய்து தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துதல் வேண்டும் என்று இடம் பெயர்ந்த தீவக மககள் நலனகாக்கும் கழகம் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸாவிடம் சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாணம் வந்துள்ள பௌத்த குருமார்களைக் கொண்ட தூதுக் குழுவிடம் கையளித்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீவகத்தில் அமைக்கப்பட்ட இராணுவ முகாம்களை உடனடியாக அகற்றி இடம் பெயர்ந்த மக்களைச் சொந்த இடங்களில் குடியேற்றி இயல்பு வாழ்க்கை வாழ வழி செய்தல் வேண்டும்.

தமிழ் மக்களை இரண்டாந்தரப் பிரஜைகளாகக் கருதி அடிப்படைத் தேவைகளைத் தடுக்காமல் பொருளாதாரத் தடையை நீக்க வேண்டும்.

இடம் பெயர்ந்த மக்களின் புனர்வாழ்வு நடவடிக்கைக்கு உடனடியாக நிதி ஒதுக்கீடு செய்தல் வேண்டும்.

இடம் பெயர்ந்து நிர்க்கதியாக உள்ள தீவக மக்களின் அடிப்படைத் தேவைகளான கல்வி, சுகாதார மருத்துவ வசதி, உணவு உடை குடியிருப்பு வசதிகளை உடனடியாக ஏற்படுத்தித் தரவேண்டும்.

இவ்வாறு அந்த மகஜரில் மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளது

# உள்ளூர் உற்பத்திகளில் பிக்குகள் ஆர்வம்

யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் பௌத்த பிக்குகளின் தூதுக் குழுவினர் உள்ளூர் உற்பத்திப் பொருட்களில் அதிக ஆர்வம் கொண்டுள்ளனர்.

உள்ளூர்மூலப்பொருட்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருட்களையும் ஏனைய உற்பத்திப் பொருட்களையும் ஆர்வத்துடன் பார்வையிடுகின்றனர். சிலவற்றைச் சுவைத்துப்பார்க்கின்றனர். அத்துடன் பல வகையான உள்ளூர் உணவு வகைகளை கொள்வனவு செய்தும் வருகின்றனர். இதற்காக நேற்று இக்குழுவினர் யாழ். நகரில் உள்ள உதயம் பல்பொருள் அங்காடி மற்றும் பெரியகடைப் பகுதி ஆகிய இடங்களிற்குச் சென்றனர். சென்ற இடங்கள் எல்லாம் உள்ளூர் உணவுப் பொருட்கள் பக்கமே இவர்களது கண்கள் திரும்பின. (க)

பௌத்த

திட்டம் தொடர்பாக பதிலறிக்கை ஒன்றை விடுதலைப் புலிகள் சமர்ப்பித்தனர்.

"தமிழரின் பிரச்சினை குறித்து ஒரு தீர்வுத் திட்டத்தை நீங்கள் தயாரித்து எமது பரிசீலனைக்கு முன்வைத்ததையிட்டு நாம் மகிழ்ச்சி தெரிவிக்கிறோம் ஆயினும் இத்தீர்வுத் திட்டம் தமிழரின் தேசிய பிரச்சினையின் சிக்கலான பரிமாணங்கள் எதையும் தொட்டு நிற்கவில்லை. நீங்கள் முன்வைத்த அகில இலங்கை தழுவிய சகல இனங்களுக்கும் பொதுவான சிறிலங்கா தாயகக் கோட்பாட்டை நாம் அங்கீகரிக்க முடியாது. ஏனென்றால் இந்தக் கோட்பாடு வரலாற்றுப் புறநிலை உண்மையை மறுக்கிறது. வரலாற்று ரீதியாக தமிழருக்கே உரித்தானஒரு தாயகப்பூமியை நிராகரிக்கிறது. நீங்கள் முன்வைத்த திட்டத்தின் ஒவ்வொரு யோசனையையும் ஆராய்ந்து விமர்சிப்பது அவசியமில்லை. உங்களது தீர்வுத் திட்டமானது தமிழரின் அடிப்படைக் கோரிக்கைகளையும் அவர்களின் அரசியல் அபிலாசைகளையும் பூர்த்தி செய்யத் தவறிவிடடது என்பதை மட்டும் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்" இவ்வாறு விடுதலைப் புலிகள் தமது பதிலறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்

தமிழ் மக்களின் பல்வேறு பிரச்சினைகளையும் நேரில் கண்டறிந்த நீங்கள் ஒரு சமாதான நல்லெண்ண சூழ்நிலையை உருவாக்குவதற்கு ஆக்கபூர்வமான முயற்சிகளை எடுக்கவேண்டுமென்றும் புலிகள் தரப்பில் கோரப்பட்டது.

# ஆப்கான் தலைநகர் காபூல் கிளர்ச்சியாளரிடம் வீழ்ச்சி

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் போட்டி முஜாஹிதீன் போராளிக் குழுக்கள் காபூலின் முக்கிய அமைப்புக்களைப் பிடித்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. அதில் ஜனாதிபதி இல்லமும் ஒன்று.

அகட்ஷா மசூதியின் தலைமையிலான ஜமைத்து இஸ்லாமி, குல்புதீன் ஹிஸ்மத்தியாவின் தலைமையிலான ஹிஸ்பி இஸ்லாமி ஆகிய இரண்டுபிரதான குழுக்கள் ஜனாதிபதி வளாகத்தில் பல்வேறு பகுதிகளைத் தங்களது கட்டுப்பாட்டில் கொண்டுவந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இடைக்கால அரசை ஏற்படுத்துவதற்கு ஒருநாள் முன்னதாக இந்த நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது.

விமானத்தளம் நீங்கலாக காபூல் நகரில் பல பகுதிகளை ஹிஸ்மி இஸ்லாமி முஜாஜிதீன் படைகள் கைப்பற்றியிருப்பதாக ஏஜென்சிச் செய்திகள் கூறுகின்றன.

விமான நிலையக் கட்டுப்பாடு கேர்ணல் போஸ்ஹஸ்பி டோவாதலைமையிலான குழுவிடம் இருக்கிறது.

நகருக்குள் நுழைவதற்கு ஹிஸ்மித்தியா இன்றுதான் காலக்கெடு வைத்திருந்தார். ஆனால் அவரது படைகள் நேற்று முன்தினம் இரவு காபூல் நகருக்குள் ஊடுருவி அரசு அமைப்புகளை திடீரென்று கைப்பற்றிக் கொண்டன.

தற்காலிகத் தலைவர் அப்துல் றகிம் ஹத்திக் உட்பட அரசின் மூத்த தலைவரி இருக்குமிடம் தெரியவில்லை.

சடலத்தை

வைத்தியசாலையில் கடந்த பத்தொன்பதாம் திகதி முதல் தங்கி சிகிச்சை பெற்று வந்துள்ளாரி.

நேற்று முன்தினம் மாலை 2-30 மணியளவில் அவர்மரணமானார்.

இது தொடர்பான தகவல் எதனையும் உறவினர்களுக்கு தெரிவிக்காது யாழ்போதனா வைத்தியசாலை நிர்வாகத்தினர் இறந்த மூன்றுமணிநேரத்திற்குள் சடலத்தை யாழ்பல்கலைக் கழக மருத்துவ பீடத்திற்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இது தொடர்பாக உறவினர் நிர்வாகத்தினரை அணுகிய போது, உறவினர்கள் எவரும் தொடர்பு கொள்ளாததினாலும், குளிரூட்டி வசதி இல்லாததினாலுமே சடலத்தை அங்கு அனுப்பியதாக தெரிவித்தனராம்.

ஆனால் உறவினர்கள் தாம் நாளாந்தம் இவரை வந்து பார்வையிட்டு உணவு போன்றவற்றை வழங்கிச் செல்வதாகவும், தாம் முகவரி கொடுத்துள்ளபோதிலும் வைத்தியசாலை நிர்வாகத்தினர் இரண்டு மைல் தூரத்திலுள்ள தமக்கு தகவல் வழங்கத் தவறியுள்ளனர் எனவும் கூறினர். இது இவ்வாறிருக்க வைத்தியசாலையில் ஒருவர் இறந்தால் அவரது மரணம் தொடர்பாக உறவினர்களுக்கு தகவல்கொடுக்க வேண்டியதும் சடலத்தை குறைந்தது மூன்றுநாட்களுக்கு வைத்தியசாலையின் சவக்காம்பறையில் வைத்தல் வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச)

குண்டு

யாளர் மாநாட்டில் திரு. பொற்கோ தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், இக்குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாக முரண்பாடான தகவல்கள் மக்கள் மத்தியில் பரவியுள்ளது. அதன் காரணமாக உண்மை நிலை தெளிவுபடுத்தப்பட வேண்டியுள்ளது. அடுப்பு எரிக்கப்பட்டபோது ஏற்பட்ட வெப்பத்தின்காரணமாக மண்ணுக்குள் இருந்த குண்டு வெடித்திருக்கலாம் எனவும், சிறிலங்கா விமானப் படையால் வீசப்பட்டு புதையுண்டு கிடந்த பீப்பாக்குண்டு வெடித்திருக்கலாம் எனவும் மக்கள் மத்தியில் பேசப்படுகிறது. ஆனால் நாம் மேற்கொண்ட விசாரணைகளில் இருந்தும், பெற்றுக்கொண்ட தகவல்களிலிருந்தும் அவற்றில் உண்மையில்லை என்பதுதெளிவாகின்றது. விஷமிகளால் பொதுமக்களை இலக்கு வைத்து இக்குண்டு வெடிப்பு நிகழ்த்தப்பட்டுள்ளது. இக்குண்டுவெடிப்பினால் பொதுமக்கள் பதினொரு பேர் உயிர் இழந்ததுடன், சுமாரி பதினைந்து பேர் வரையில் படுகாயமடைந்துள்ளனர்.

தற்போது வடபகுதிக்கு நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டு பௌத்த பிக்குகள் வந்திருக்கும் சூழலில் ஒருபதற்றத்தை ஏற்படுத்தவே இக்குண்டு வெடிப்புச் சம்பவம் நிகழ்த்தப்பட்டுள்ளது எனக்கொள்ளலாம் எனக் கூறிய அவர், காங்கேசன்துறைக்குச் சென்ற செஞ்சிலுவை வாகன அணி மீது கடற்படையினர் நடத்திய தாக்குதலும் இது போன்ற ஐயத்தை வலுப்படுத்துவதாகவும் குறிப்பிட்டார்.

எனவே பொதுமக்கள் சந்தேகப்படக்கூடிய நபர்களின் நடமாட்டம் பற்றியோ, சந்தேகப்படக்கூடிய பொருள்கள் குறித்தோ அண்மையில் இருக்கும் விடுதலைப் புலிகள் உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்துவதன் மூலம் அசம்பாவிதச் சம்பவங்கள் நிகழ்வதைத் தடுக்க முன்வரவேண்டுமெனவும், மிகுந்த அவதானத்தோடும் எச்சரிக்கை உணர்வோடும் செயற்படவேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார்

விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்டச் செயலகத்தில் நேற்று மாலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பொற்கோ அவர்களுடன், மக்கள் தொடர்பு மூன்னெடுப்புப் பிரிவுப் பொறுப்பாளர் பரா, யாழ்.மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இளம்பரிதி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

தந்தை

இந் நினைவுக் கூட்டத்தில் நினைவுரைகளும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பேச்சாளர்களின் சிறப்புரைகளும் இடம் பெறும்.

இதனைத் தொடர்ந்து கவியரங்கம் நாடகம் என்பன இடம் பெறவுள்ளன.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.